1993 அக்டோபர் 29]

திரு. எம், பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகாரில் மீன் பிடிக்கின்ற படகுகள் நிறைய உள்ளன, அங்கே அந்த படகுகள் வர வசதியாக கலங்கரை விளக்கம் அமைத்துத் தர வேண்டியது அவசியம் என்று வேண்டுகிறேன். ஆகவே அரசு வருகின்ற ஆண்டிலாவது அங்கே கலங்கரை விளக்கம் அமைத்துத் தருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கலங்கரை விளக்கம் உள்ள இடங்கள் கடலூர் தென்னாற்காடு மாவட்டம், பாம்பன் இராமநாதபுரம் மாவட்டம், குளச்சல் கன்னியாகுமரி மாவட்டம் ஆகும். ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவு பகுதிகள் அத்தனையும் கடல் பகுதியாக கடலை ஒட்டி இருக்கின்றன, தமிழகத்திலே தான் ஆயிரம் கிலோ மீட்டர் கடல் பகுதிகள் இருக்கின்றன, ஆகவே மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை மனதிலே கொண்டு மத்திய அரசுக்கு அது பரிந்துரை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு. க. அர்ச்சுனன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

65—

மேட்டூர் ஆர். எஸ்.—லிருந்து மேச்சேரி எம். என். பட்டி வழியாக பேருந்து விடுதல்

* 20417— திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுக்கா, மேட்டூர் ஆர். எஸ்.—லிருந்து மேச்சேரி எம். என். பட்டி வழியாக ஒரு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு, கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்போது இத்தடத்தில் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எம். என். பட்டி என்பது மேட்டூர் தாலுக்காவினுடைய கடைசி கிராமமாக இருக்கிறது, அங்கே தற்போது நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக ஆக்கப்பட்டிருப்பதால் அவசியம் மேட்டூரிலிருந்து அந்தப் பகுதிக்கு ஒரு பேருந்து தேவைப்படுகிற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனமுவந்து உடனடியாக ஒரு பேருந்தை இயக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரிலிருந்து நேரடியாக பேருந்துகள் எம். என். பட்டிக்கு கேட்கிறார்கள். இப்போது. சேலத்திலிருந்தும் அதே போல ஓமலூரிலிருந்தும் அந்த பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம், நேரடியாக பேருந்துகள் விடுவதற்கு நிதி ஆதாரம் இருக்கின்ற நேரத்தில் பேருந்துகள் இயக்கப்படும்.

திரு. க. அர்ச்சுனன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூருக்கு சேலத்திலிருந்து ஒரு புறம் கிழக்குப் பகுதியிலிருந்து தான் பஸ் வசதி இருக்கிறது, மேற்கு திசையிலே மேட்டூர் தாலுக்காவிற்குள் எம். என், பட்டி அடங்கியிருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதியிலிருந்து மேச்சேரி வழியாக மேச்சேரிக்கு வருகின்ற பஸ்ஸை கூட இரண்டு ட்ரிப் இதற்கு எக்ஸ்டெண்ட் செய்யலாம், அந்த வகையிலாவது புதிய பேருந்து இதற்காகவே என்று விடாவிட்டாலும் கூட காலையிலும் மாலையிலும் பள்ளி மாணவர்களுடைய வசதியை பொறுத்து ஒரு பேருந்து விட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஒரு வார காலத்தில் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 66, திரு. கி. தருமலிங்கம், இருக்கையில் இல்லை.

வினா எண் 67, டாக்டர் பீட்ரிக்ஸ் டி’ சோசா,, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.